www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR11T

# விருதுநகர் மாவட்டம்
## அரையாண்டுத் தேர்வு -டிசம்பர் 2024

வகுப்பு – 11

காலம் 3:15 பொதுத் தமிழ் மதிப்பெண்கள் – 90

பகுதி –I

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** 14×1=14

1) பாயிரம் இல்லது______ அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) மொழி முதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி. ஈ) றெக்கை, அங்ஙனம்

3) 'நாடற்றவன்' நூலின் ஆசிரியர்?
அ) அ.கி. பரந்தாமனார் ஆ) சு. வில்வரத்தினம்
இ) அ. முத்துலிங்கம் ஈ) ஜெயமோகன்

4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை.
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
(i) அ- மட்டும் சரி (ii) ஆ -மட்டும் சரி.
(iii) இரண்டும் சரி. (iv)அ- தவறு ,ஆ-சரி

5) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

6) துன்பப்படுபவர் ____________
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

7) ஏடு ,சுவடி, பொத்தகம் ,பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் _________ என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

8) Education Committee என்பதன் கலைச்சொல்?
அ) மதிப்புக் கல்வி ஆ) கல்விக்குழு
இ) உள்கட்டமைப்பு ஈ) செம்மொழி

9) உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு.
அ) உரிச்சொல்தொடர் ,ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை ,இடவாகு பெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

10) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று.
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

11) இரணியன், ராவணன் , எமதர்மன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தவர்?
அ) ஆபிரகாம் பண்டிதர் ஆ) மீனாட்சி சுந்தரனார்
இ) சங்கரதாசு சுவாமிகள் ஈ) டி .கே. சிதம்பரநாதர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12) 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' -யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

13) எப்போதும் மத்தாப்பு
கொளுத்தி விளையாடுகிறது
மலையருவி - கவிதையின் ஆசிரியர்?

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) கழனியூரன் இ) ஜெயமோகன் ஈ) தாராபாரதி

14) கூவும் குயிலும் கரையும் காகமும்- தொடரில் இடம் பெற்ற மரபு

அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்

## பகுதி –II

### பிரிவு-1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக :** 3×2= 6

15) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

16) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின-தொடரின் பொருள் யாது?

17) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள- இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

18) சீர்தூக்கி ஆராயவேண்டி ஆற்றல்கள் யாவை?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.** 2×2=4

19) தமிழ்நாட்டின் மாநிலமரம்- சிறு குறிப்பு வரைக.

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு-3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

22) உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

23) பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:
அ) பாஸ்போர்ட் ஆ) கம்பெனி

24) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

25) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:
குரை,குறை

26) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:
அ) குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடு தான் குமரனது வீடு.
ஆ) பகுபத தன்மை உள்ள மொழியை கற்று கொள்வது எளிது.

27) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: வைகை

28) செய்தித் தொடராக்குக:
என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



29) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:
அ) பயமில்லை. ஆ) உலகனைத்தும்

30) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:
அ) முளைத்த ஆ)ஆழ்க

## பகுதி -III

### பிரிவு -1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2×4=8

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) மருந்து, மருத்துவர்,மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

33) "சலச வாவியில் செங்கயல் பாயும்"-இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2×4=8

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

37) ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ;கற்றளிக்கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

38) இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

### பிரிவு -3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக :** 3×4=12

39) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

( அல்லது)

வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41) **தமிழாக்கம் தருக:**

அ)The pen is mightier than the Sword.

ஆ) Work while you work and play while you play.

இ) Education is the most powerful weapon, which you can use to Change the world.

ஈ) Culture does not make people.People make culture.

42) புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(கம்பு ,மை , வளை, மதி, இதழ்,ஆழி)

அ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான்________

ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்கு கூழாகவும் குடிக்கலாம்________

இ) பூவின் உறுப்பும் நானே;புன்னகையின் பிறப்பிடமும் நானே________

ஈ) கண்ணிலும் எழுதலாம்;வெண்தாளிலும் எழுதலாம்.________

43) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி –IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.** 3×6=18

44) அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி'என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி,மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜனின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி –V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** 4+2=6

அ) "ஏடு தொடக்கி " எனத் தொடங்கும் யுகத்தின் பாடலைஅடி பிறழாமல் எழுதுக.

ஆ) "பகை" என முடியும் குறளை எழுதுக.

-----------------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com